# மோட்டார் வாகனக் காப்புறுதி – காப்புறுதித் திட்டம் பற்றிய தகவல் ஆவணம் (IPID)

**காப்புறுதி வகை:** மோட்டார் வாகனக் காப்புறுதி

**வழங்கப்படுகின்ற அடிப்படைக் காப்பீடு:**

முதலாம் பிரிவு – வாகனத்திற்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம் (பூரணக் காப்புறுதிகளுக்கு ஏற்புடையதாகும்)

அ) எதிர்பாராத வெளிவாரியான காரணங்கள்
ஆ) தீ, வெளிப்புறமாக ஏற்படும் வெடித்தல், சுயதீப்பற்றல், மின்னல் அல்லது திருட்டு, கண்ணம் வைத்தல் அல்லது கொள்ளை
இ) துவேசகரமான செயற்பாடுகள்
ஈ) பொது வீதியில், இரயில் பாதையில், உள்ளக நீர் மார்க்கங்களில், லி∴ப்டில் அல்லது எலிவேட்டரில் கொண்டு செல்லப்படும் போது

*(அடிப்படைக் காப்பீடு பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 03 ஆம் பக்கத்தைப் பார்க்க)*

இரண்டாம் பிரிவு – காப்புறுதி செய்யப்பட்ட வாகனத்தைப் பாவிப்பதனால் எழும் மூன்றாம் தரப்பினருக்கான பொறுப்புக்கள்

அ) எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும் ஏற்படுகின்ற விபத்து மரணம் அல்லது உடற் காயம் - வரையறையற்ற பொறுப்புக்கள்
ஆ) எந்தவொரு மூன்றாம் தரப்பின் சொத்துக்கு ஏற்படுகின்ற விபத்துச் சேதம் - உங்கள் காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை வரை

*(மூன்றாம் தரப்பினர் பொறுப்புக்கள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 05 ஆம் பக்கத்தைப் பார்க்க)*

**காப்பீடு வழங்கப்படாதவைகள் (விதிவிலக்குகள்):**

**முதலாம் பிரிவுக்கு ஏற்புடையதாகும்**

அ) ஒரே சமயத்தில் ஒரே விபத்தில் உங்களது வாகனத்தின் ஏனைய பாகங்களுக்கும் சேதம் ஏற்பட்டிருந்தாலேயன்றி டயர்களுக்கும் டியுப்களுக்கும் ஏற்படுகின்ற சேதம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் டயர்களுக்கும் டியுப்களுக்கும் ஏற்படுகின்ற சேதம் தொடர்பான கம்பனியின் பொறுப்பானது மீளப்பொருத்தும் செலவின் 50 சத வீதத்தை தாண்டமாட்டாது.
ஆ) தனியார் கார்கள் என்ற வகையில் காப்பீடு செய்யப்பட்டுள்ள வாகனங்களைத் தவிர, ஒரே சமயத்தில் குறிப்பிட்ட வாகனமும் திருடப்பட்டிருந்தாலேயன்றி திருட்டு காரணமாக துணைப் பாகங்கள், உதிரிப்பாகங்கள் அல்லது அத்தியவசிய பாகங்களுக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.
இ) பேருந்துகள், ஓம்னிபஸ்கள் மற்றும் மோட்டார் கோச்சுகள் என்ற வகையில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களின் வளித்தடுப்புக் கண்ணாடி(கள்) / யன்னல்களுக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதத்தின் போது:

i. மேற்படி மோட்டார் வாகனத்தின் (துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் உட்பட) காப்புறுதி செய்யப்பட்டவரின் மதிப்பீட்டுப் பெறுமதி, அல்லது

ii. மேற்படி மோட்டார் வாகனத்தின் பெறுமதி (துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் உட்பட) ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியின், 10 சதவீதத்துக்கு அதிகமான இழப்பு அல்லது சேதம்.

ஈ) வாடகை நோக்கங்களுக்காக காப்பீடு செய்யப்பட்டுள்ள அனைத்து வாகனங்களினதும் விளக்குகள், டயர்கள், மட்காட்கள், பபர்கள், பபர்ஏப்ரன்கள், பபர்பிரகெட்கள் மற்றும்/அல்லது பெயின்ட் வேலைகள் ஆகியவற்றுக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.
உ) பாவனை இழப்பு அல்லது வேறேதும் பின்விளைவு இழப்பு.

ஊ) பெறுமதி குறைதல், பாவனையால் தேய்தல், இயந்திர அல்லது மின்சார செயலிழப்பு, பிரேக் செயற்படாமை.

எ) அதிக சுமையேற்றல் அல்லது அந்த வாகனத்தின் சுமையின் தன்மை காரணமாக ஏற்படுகின்ற அளுத்தங்கள்.

ஏ) ஒரு விபத்து காரணமாக வாகனத்திற்கு வெளிவாரியான சேதம் ஏற்பட்டிருந்தாலன்றி, வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள ஜெக், பூம்லி.ஃப்ட், கிரேன், அல்லது அதனை ஒத்த உபகரணங்களுக்கு ஏற்படுகின்ற இழப்பு அல்லது சேதம்.

*(முதலாம் பிரிவின் கீழ் ஏற்புடையதாகும் விதிவிலக்குகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 04 ஆம் பக்கத்தைப் பார்க்க)*

**இரண்டாம் பிரிவுக்கு ஏற்புடையதாகும்**

(அ) வாகனத்தைச் செலுத்துகின்ற (நீங்கள் உற்பட) எவரேனும் ஒருவருக்கு ஏற்படுகின்ற மரணம் அல்லது உடற்காயம்

(ஆ) காப்புறுதி செய்யப்பட்டவரின் கீழ் கடமையாற்றிக் கொண்டிருக்கையில் அந்த உத்தியோகம் காரணமாக எவரேனும் ஒருவருக்கு ஏற்படுகின்ற மரணம் அல்லது உடற் காயம்

(இ) உங்களுக்குச் சொந்தமான அல்லது உங்களது பொறுப்பில், பாதுகாப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற அல்லது உங்களது குடும் அங்கத்தவர் ஒருவரது பொறுப்பில் இருக்கின்ற ஆதனத்துக்கு அல்லது அந்த வாகனத்தின் மூலம் கொண்டு செல்லப்படுகின்ற சொத்துக்களுக்கு ஏற்படுகின்ற சேதம்:

(ஈ) அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வாடகைக்கு பயணிகளை ஏற்றிச் செல்கின்ற வாகனமாக காப்புறுதி செய்யப்பட்டுள்ள ஒரு வாகனத்தில் எடுத்துச் செல்லப்படும் போது அல்லது அதில் ஏறும் போது அல்லது இறங்கும் போது ஒரு ஆளுக்கு ஏற்படுகின்ற மரணம் அல்லது உடற்காயம்.

(உ) வாகனம் ஓடக்கூடிய பாதையின் அல்லது பொதுப் பாதையின் எல்லைக்கு வெளியே குறிப்பிட்ட வாகனத்துக்கான சுமையை எடுத்து வருகின்ற போது அல்லது அந்த வாகனத்தில் இருந்து சுமையை இறக்கியதன் பின்னர் அதனை அங்கிருந்து எடுத்துச் செல்கின்ற போது ஏற்படுகின்ற மரணம், உடற்காயம் அல்லது சேதம்.

(ஊ) ஏதும் ஒரு பாலத்துக்கு அல்லது நிறுக்கும் பாலத்துக்கு அல்லது viaduct வீதிக்கு அல்லது ஏதேனும் ஒரு பாதைக்கு அல்லது அதன் கீழுள்ள ஏதும் ஒரு விடயத்துக்கு வாகனத்தில் கொண்டு செல்லப்படுகின்ற சுமை காரணமாக அல்ல அதன் அதிர்வின் காரணமாக ஏற்படுகின்ற ஏதும் சேதங்கள்:

(எ) மரணம் அல்லது காயமானது அந்த வாகனத்தை பயன்படுத்தியதனால் அல்லது அதன் மூலம் ஏற்பட்டிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தைத் தவிர அந்த வாகனத்தின் பொய்லர் வெடித்தமையினால் ஏற்படுகின்ற மரணம் அல்லது உடற்காயம் அல்லது சேதம்.

(ஏ) வாகனத்துடன் தொடர்புள்ள வகையில் அதன் ஒரு பாகமாக இருக்கின்ற அல்லது அதனோடு இணைக்கப்பட்டுள்ள அல்லது பயன்படுத்தப்படுகின்ற ஒரு உபகரணத்தை அல்லது பொறியை இயக்குவதனால் அல்லது பாவிப்பதனால் ஏற்படுகின்ற மரணம் அல்லது உடற்காயம் அல்லது சேதம்.

*(இரண்டாம் பிரிவின் கீழ் ஏற்புடையதாகும் விதிவிலக்குகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 06 ஆம் பக்கத்தைப் பார்க்க)*

**முதலாம் மற்றும் இரண்டாம் பிரிவுக்கு ஏற்புடையதாகும் (பொது விதிவிலக்குகள்)**

1) உங்களது காப்புறுதிப் பத்திரச் சான்றிதழில் ''பாவனைக்கான வரையறைகள்'' உடன் சம்பந்தப்பட்டிராத ஏதும் நோக்கத்திற்காக பாவிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில்,
2) அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒரு சாரதியைத் தவிர எவரேனும் ஒரு நபரினால் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கையில்,
3) நீங்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு சாரதி மதுபானம் அல்லது போதைப் பொருளினால் போதைக்குள்ளான நிலையில் வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கையில்.
4) ஓர் ஒப்பந்தம் காரணமாகப் பிரயோகிக்கப்படுகின்ற ஆனால் அந்த ஒப்பந்தம் இல்லாமல் இருந்திருந்தால் பிரயோகிக்கப்பட்டிருக்காத ஏதும் பொறுப்புக்களுக்கு **நாம்** காப்பீடு வழங்க மாட்டோம்.
5) யுத்தம்
6) பணிப்புறக்கணிப்பு, கலகம், மக்கள் கொந்தளிப்பு (மேலதிக கட்டுப்பணத்தைச் செலுத்தி காப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காவிட்டால்)
7) பயங்கரவாதம் (மேலதிக கட்டுப்பணத்தைச் செலுத்தி காப்பீடு பெற்றுக்

கொள்ளப்பட்டிருக்காவிட்டால்)
8) தடுத்துவைத்தல், கைப்பற்றல், அரசுடைமையாக்கப்படல் அல்லது அதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சி
9) வெள்ளப்பெருக்கு, புயல், சண்டமாருதம், அல்லது வேறேதும் வளிமண்டல சீர்குலைவு, எரிமலை வெடித்தல், பூமியதிர்வு அல்லது ஏனைய இயற்கை அனர்த்தங்கள்
10) கதிரியக்கம் மற்றும் அணுவாயுதப் பொருட்கள்
11) பதிவு செய்யப்படாத / பதிவை இரத்துச் செய்துள்ள வாகனங்கள்

*(பொதுவான விதிவிலக்குகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 07 மற்றும் 08 ஆம் பக்கங்களைப் பார்க்க)*

**<u>ஒரு மேலதிக கட்டுப்பணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ள முடிகின்ற மேலதிக காப்பீடுகள் - கீழே குறிப்பிடப்பட்டுள்ள காப்பீடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் அது பற்றி உங்களின் காப்புறுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும்:</u>**

1) வாடகைக் கொள்வனவு வாகனம் தொடர்பில் கொள்வனவு / குத்தகைக் காப்பீடு
2) சாரதிக்கு அல்லது பயணிகளுக்கு ஏற்பகின்ற விபத்து மரணம் மற்றும் நிரந்தர பூரண இயலாமைக்கு எதிரான தனிநபர் விபத்துக் காப்பீடு
3) வாடகைக்கு வழங்கப்படுகின்ற வாகனங்களுக்கான பயணிகள் காப்பீடு
4) வாகனத்தில் சம்பளம் பெறுகின்ற ஊழியர்களுக்கான தொழிலாளர் நட்டஈட்டுக் காப்புறுதி
5) வாகனத்தினால் கொண்டு செல்லப்படுகின்ற பொருட்களுக்கான பொருட்கள் பெயர்வுக் காப்பீடு
6) பணிப்புறக்கணிப்பு, கலகம் மற்றும் பொதுமக்கள் கொந்தளிப்பு
7) பயங்கரவாதக் காப்பீடு
8) பயிற்சி சாரதிக் காப்பீடு
9) வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட இயற்கை அனர்த்தக் காப்பீடு
10) வாகனத்தின் அடிச்சட்டத்திற்கு எந்தச் சேதமும் ஏற்படாமல் வளித்தடுப்பு சேதத்துக்கான விசேட வளித்தடுப்புக் காப்பீடு
11) இழுத்துச் செல்லும் காப்பீடு
12) தவிர்க்கப்பட்டுள்ள பொருட்கள் - வாடகைக்கு விடப்படுகின்ற வாகனங்களின் விலக்களிக்கப்பட்டுள்ள பொருட்கள் (விளக்குகள், டயர், மட்கார்ட், ப.்.பர், ப.்.பர்பிரகட், ப.்.பர் ஏப்ரன் மற்றும்/அல்லது சாயம் பூச்சு வேலைகள்) காப்பீடு செய்யப்படும்
13) மூன்றாம் தரப்பினர் சொத்து சேதத்தின் வரையறையை அதிகரிப்பதற்காக மூன்றாம் தரப்பு சொத்து காப்பீடு
14) பயிலுனர் சாரதி பாடசாலைகளுக்கான பயிலுனர் சாரதி வகுப்புகள்
15) வேறொரு தரப்புக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ள வாகனங்களுக்காக வாடகைக்கு பெற்றுள்ள சாரதிக் காப்பீடு
16) கடன் வசதியின் கீழ் பெற்றுக் கொண்டுள்ள வாகனங்களுக்கான நிறுவனக் கடன் காப்பீடு
17) தனியார் இரு நோக்க வாகனங்களுக்கான உதிரிப் பாகங்கள் திருட்டு காப்பீடு
18) வாகனத்திற்கு வெளிவாரியான விபத்துச் சேதம் ஏற்படாதிருக்கையில் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள ஜெக், பூம்லி.்.ப்ட், கிரேன் அல்லது அதனை ஒத்த உபகரணங்களுக்கு ஏற்படுகின்ற சேதங்களைக் காப்பீடு செய்வதற்காக நிர்மான இடங்களில் பாவிக்கப்படுகின்ற வாகனங்களுக்கான வர்த்தக உபகரணங்கள் காப்பீடு

*(மேலதிக காப்பீடுகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 12 மற்றும் 21 ஆம் பக்கங்களைப் பார்க்க)*

<u>முக்கியமான இலட்சணம்(ங்கள்):</u>

**கோரிக்கை விடுக்காமைக்கான கழிவு (பூரண காப்புறுதிகளுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்)**

இந்தக் காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் எந்த உரிமைக்கோரலும் விடுக்கப்படாத அல்லது எழாத ஒரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு வருடமும் உங்களுக்கான கோரிக்கை விடுக்கமைக்கான கழிவு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விகிதாசாரத்தினால் அதிகரிக்கப்படும்:

| | மோட்டார் சைக்கிள்களுக்கு ஏற்புடையதாகும் | ஏனைய அனைத்து வாகனங்களுக்கும் ஏற்புடையதாகும் |
|---|---|---|
| கடந்த வருடத்தில் | 10% | 10% |
| தொடராக கடந்த 2 வருடங்களில் | 15% | 15% |
| தொடராக கடந்த 3 வருடங்களில் | 20% | 20% |
| தொடராக கடந்த 4 வருடங்களில் | 25% | 25% |
| தொடராக கடந்த 5 வருடங்களில் | 30% | 30% |
| தொடராக கடந்த 6 வருடங்களில் | 35% (அதிகபட்சம்) | 35% |
| தொடராக கடந்த 7 வருடங்களில் | | 40% |
| தொடராக கடந்த 8 வருடங்களில் | | 45% |
| தொடராக கடந்த 9 வருடங்களில் | | 50% |
| தொடராக கடந்த 10 வருடங்களில் | | 55% |
| தொடராக கடந்த 11 வருடங்களில் | | 60% |
| தொடராக கடந்த 12 வருடங்களில் | | 65% |
| தொடராக கடந்த 13 வருடங்களில் | | 70% |
| தொடராக கடந்த 14 வருடங்களில் | | 75% |
| தொடராக கடந்த 15 வருடங்களில் | | 80% ( அதிகபட்சம்) |

ஒரு வருடத்திற்குள் விடுக்கப்படுகின்ற எந்தவொரு உரிமைக்கோரலுக்காகவும் உங்களின் கோரிக்கை விடுக்காமை கழிவு கடந்த மூன்று (03) வருடங்களில் பெற்றுக் கொண்டுள்ள விகிதங்களால் அடுத்த வருடத்தில் கழிக்கப்படும்.

*(கோரிக்கை விடுக்காமைக்கான போனஸ் பற்றிய மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 05 ஆம் பக்கத்தைப் பார்க்க)*

**கவனத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்கள்**

(1) வாகனத்துக்கு இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள இயலுமான அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வாகனம் பாதையில் செலுத்தப்படுவதற்கு தகுந்த நிலையில் பராமரித்துக் கொள்வதற்கும் நீங்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலேனும் வாகனத்தை அல்லது அதன் ஒரு பாகத்தை பரிசோதிப்பதற்காக எங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இழப்பு அல்லது செயலிழப்பு ஏற்ட்ட ஒரு சந்தர்ப்பத்தில் வாகனத்தை உரிய பாதுகாப்பு இன்றி தனிமைப்படுத்தக் கூடாது என்பதுடன் மேற்கொண்டும் சேதம் ஏற்படாத வண்ணம் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தேவையான திருத்த வேலைகள் பூரணமடைவதற்கு முன்னர் உங்களது விருப்பத்துக்கு வாகனத்தைச் செலுத்துவதனால் வாகனத்துக்கு மேலும் சேதம் ஏற்பட்டால் அந்த இழப்புக்கு **நாங்கள்** பொறுப்புக் கூற மாட்டோம்.

**(2) இழப்பீடு பற்றிய அறிவித்தல்**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நிகழ்வு இடம்பெற்றாலும் தாமதியாது நீங்கள் எங்களுக்கு அறிவித்தல் வேண்டும்:

(அ) இழப்பீடு கோரப்படக்கூடிய ஒரு விபத்து
(ஆ) சிவில் அல்லது குற்றவியல் வழக்கு

ஒரு திருட்டு இடம் பெற்றிருந்தால் நீங்கள் உடனடியாக பொலிசுக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) உரிமைகோரலின் போது செயற்பட வேண்டிய விதம்

இழப்பு, சேதம் அல்லது காயத்தை ஏற்படுத்துகின்ற ஒரு சம்பவம் இடம் பெற்றால்:

(அ) உங்களுக்கு எதிரான எந்தவொரு உரிமைக்கோரலையும் பாதுகாப்பதற்கு அல்லது தீர்த்து வைப்பதற்கு உங்களின் பெயரில் அவற்றை நாம் பொறுப்பேற்று மேற்கொள்வோம். எந்தவொரு சட்ட நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு மற்றும் எந்தவொரு உரிமைக்கோரலையும் செலுத்துவதற்கு எங்களுக்கு பூரண உரிமை உள்ளது: மற்றும்

(ஆ) நாம் கோருகின்ற அனைத்து தகவல்களையும் ஒத்துழைப்புக்களையும் நீங்கள் எமக்கு வழங்க வேண்டும். எமது எழுத்து மூல அங்கீகாரம் இன்றி நீங்கள் எதனையும் பொறுப்பேற்கவோ அல்லது நிராகரிக்கவோ, ஒரு கொடுப்பனவு தொடர்பில் கலந்தாலோசிப்பதோ அல்லது வாக்குறுதி வழங்கவோ கூடாது. நாம் அனுமதி வழங்குவதை நியாயமான காரணங்கள் இன்றி இடைநிறுத்த மாட்டோம்.

(4) காப்புறுதி செய்யப்பட்டுள்ள வாகனத்திற்கு இழப்பு அல்லது சேதம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டுப் பெறுமதி சந்தைப் பெறுமதியை விட அதிகமாக இருந்தால், அந்த வித்தியாச தொகைக்கான காப்புறுதியாளராக நீங்கள் இருக்க வேண்டும் என்பதுடன், இழப்பின் அல்லது சேதத்தின் விகிதாசார பிரிவொன்றை நீங்கள் பொறுப்பேற்க வேண்டும். எனவே சந்தைப் பெறுமதிக்கு இணங்க உங்கள் வாகனத்தின் காப்புறுதித் தொகையை கலந்து பேசி புதுப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(5) இரத்துச்செய்தல்

இறுதியாக அறியப்பட்ட உங்களது முகவரிக்கு பதிவுத் தபாலில் ஏழு (7) நாட்கள் அறிவித்தல் கொடுத்து விட்டு நாங்கள் உங்களது காப்புறுதியை இரத்துச் செய்யலாம். அவ்வாறான சந்தர்பங்களில் காப்புறுதி அமுலில் இருந்த காலத்துக்காக சரிசமவிகித அளவைக் கழித்துக் கொண்டு கட்டுப்பணத்தை உங்களுக்குத் திருப்பித் தருவோம். தற்போதைய காப்புறுதிக் காலப் பகுதியில் உரிமைக் கோரிக்கை எதுவும் விடுக்கப்பட்டிருக்கக் கூடாது என்ற நிபந்தனைக்கு இது உட்பட்டு ஏழு (7) நாட்கள் அறிவித்தல் கொடுத்துவிட்டு விரும்பிய நேரம் நீங்களும் காப்புறுதியை இரத்துச் செய்யலாம் என்பதுடன் கம்பனியின் வழமையான குறுகிய கால வீதத்துக்கு இணங்க நிருவாகக் கட்டணம் கழிக்கப்பட்டு கட்டுப்பணத்தை உங்களுக்குத் திருப்பித் தருவோம்.

**<u>காப்புறுதி உரிமையாளரின் பொறுப்பு:</u>**

**முக்கியமான தகவல்களை வெளியிடுவது பற்றிய காப்புறுதி உரிமையாளரின் பொறுப்பு:-**

- கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில்:- எந்தவொரு உரிமைக்கோரல் நிராகரிப்பையும் தடுத்துக் கொள்வதற்காக பிரேரணைப்பத்திரத்தில் கோரப்பட்டுள்ள அனைத்து முக்கியமான விடயங்களையும் உண்மையாகவும் சரியாகவும் வெளிப்படுத்தவும்.
- காப்புறுதிக் காலஎல்லையில்:- அபாயவாய்ப்பு மற்றும் தனிப்பட்ட தகவல்களில் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பற்றி காப்புறுதிக் கம்பனிக்கு அறிவிக்கவும்.

*தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 10 ஆம் பக்கத்தில் ''நிபந்தனை'' எனும் பிரிவின் கீழ் விடய இலக்கம் 06 ஐப் பார்க்க.*

**உரிமைக்கோரல் விடுக்கும் போது காப்புறுதி உரிமையாளரின் பொறுப்பு:-**

- உரிமைக்கோரலை சமர்ப்பிக்கும் போது:- உரிமைக்கோரல் படிவத்துடன் உரிமைக்கோரல் செயன்முறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவையான அனைத்து ஆவணங்களையும் விபரங்களையும் வழங்கவும்.

  *தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 09 ஆம் பக்கத்தில் ''நிபந்தனை'' எனும் பிரிவின் கீழ் விடய இலக்கம் 04 ஐப் பார்க்க.*

- கட்டுப்பணம் செலுத்துதல்:- காப்புறுதிப்பத்திரத்தின் கட்டுப்பணம் செலுத்தும் செயலாணைக்கு இணங்கி இருத்தல் வேண்டும்.

  *தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 11 ஆம் பக்கத்தில் ''நிபந்தனை'' எனும் பிரிவின் கீழ் விடய இலக்கம் 12 ஐப் பார்க்க.*

**கட்டுப்பணம் செலுத்தும் முறை:**

காப்புறுதிக்கான கட்டுப்பணம் மற்றும் அதன் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற புதுப்பித்தலின் போதான கட்டுப்பணங்கள் (காப்புறுதி அட்டவணையில் வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டிருக்காவிட்டால்) வருடாந்தம் செலுத்தப்பட வேண்டும்.

**மோசடி:**

காப்புறுதி செய்யப்பட்டவரால் அல்லது அவரின் சார்பாக சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதேனும் ஓர் உரிமைக்கோரிக்கை ஏதேனும் ஒரு வகையில் ஆதாரம் அற்றதாகவோ அல்லது மோசடியானதாகவோ அல்லது வேண்டுமென்றே மிகைப்படுத்தப்பட்டதாகவோ இருந்தால், அல்லது அதற்கு ஆதரவாக பொய்யான பிரகடனம் அல்லது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், இதன் கீழ் எந்தவொரு கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**முறைப்பாடுகள் பற்றிய நடைமுறை:-**

உங்களுக்கு சேவை வழங்க நாம் மிகுந்த ஆவலுடன் காத்திருக்கிறோம் என்பதுடன் உங்களின் ஆலோசனைகளை/முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ள விரும்புகின்றோம். எமது சேவை தொடர்பில் நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால், நீங்கள் பின்வரும் முறைகள் ஊடாக ஒரு முறைப்பாட்டை முன்வைக்கலாம்:

- தொலைபேசி மூலம் - வாக்கையாளர் சேவை உத்தியோகத்தர் – 011 2126136
- மின்னஞ்சல் மூலம் - pilassist@peoplesinsurance.lk
- வட்ஸ்அப் மூலம் - 0716230048
- தொலைநகல் மூலம் - 011 2126109
- தபால் மூலம் - வாடிக்கையாளர் சேவை உத்தியோகத்தர், பீபள்ஸ் இன்சூரன்ஸ் பீஎல்சீ, இலக்கம் 07, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05
- ஒன்லைன் வழியாக – முறைப்பாடுகளை சமர்ப்பிக்கும் படிவத்தை எமது www.peoplesinsurance.lk எனும் வெப்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம். தயவுசெய்து ‘‘முறைப்பாடுகள்’’ டெப் ஐ அழுத்தவும்.
- எமது அலுவலகத்துக்கு வருவதன் மூலம்

ஒரு முறைப்பாட்டை சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் பின்வரும் தகவல்களை வழங்க வேண்டும்:-

i. முறைப்பாட்டை சுருக்கமாக
ii. உங்களின் பெயர் மற்றும் உங்களைத் தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கங்கள்
iii. குறிப்புகள்: காப்புறுதிப்பத்திர இலக்கம் / வாகன இலக்கம் / உரிமைக்கோரல் இலக்கம்
iv. உறுதிப்படுத்துகின்ற எந்தவொரு ஆவணமும்

முறைப்பாடுகளைக் கையாளும் செயன்முறையை மும் மொழிகளிலும் எமது www.peoplesinsurance.lk எனும் வெப்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம். தயவுசெய்து ‘‘முறைப்பாடுகள்’’ டெப் ஐ அழுத்தவும்.

*(முறைப்பாடுகளை விசாரித்தல் பற்றிய மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 21 ஆம் பக்கத்தைப் பார்க்க)*

**முரண்பாடுகளைத் தீர்த்தல்:-**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒரு முறைப்பாட்டுக்காக எம்மால் வழங்கப்பட்ட தீர்வு உங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்றால், கீழுள்ள மாற்று முரண்பாடுகளைத் தீர்க்கும் பொறிமுறையை நீங்கள் பயன்படுத்தலாம்:

i. உங்கள் முறைப்பாடுகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:-

இலங்கை காப்புறுதி ஒம்புட்ஸ்மன்
இல. 143 ஏ, வஜிர வீதி, கொழும்பு 05
info@insuranceombudsman.lk
011 2505542 / 011 250 5041

ii. மத்தியஸ்தம்:- காப்புறுதிப்பத்திரத்தின் மத்தியஸ்த வாசகத்தின்படி

iii. உங்கள் முறைப்பாடுகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:-

பணிப்பாளர் – ஆய்வு
இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
11ஆம் மாடி, கிழக்கு கோபுரம்,
உலக வர்த்தக மையம்,
கொழும்பு 01
011 2396184-9 / 011 2335167
investigation@ircsl.gov.lk / info@ircsl.gov.lk

*(முறைப்பாடுகளை விசாரித்தல் பற்றிய மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து காப்புறுதிப்பத்திரத்தின் 21 ஆம் பக்கத்தைப் பார்க்க)*

**முக்கிய குறிப்புகள்:**

1. காப்புறுதித் திட்டங்கள் பற்றிய ஆவணத்தினி (IPID) நோக்கமாக இருப்பது, அடிப்படைக் காப்பீடு மற்றும் மேலதிக காப்பீடுகளின் (ஏற்புடையதானால்) மற்றும் காப்புறுதிப்பத்திரத்தின் முக்கியமான இலட்சணங்கள் பற்றிய சாராம்சம் ஒன்றை வழங்குவதாகும் என்பதுடன் அது உங்களின் குறிப்பிட்ட பிரத்தியேக தேவைகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ள ஒன்றல்ல என்பதைக் கவனிக்கவும். இந்தக் காப்புறுதியுடன் தொடர்பான அனைத்து விடயங்களும் இந்த ஆவணத்தின் உள்ளடக்கங்களை மேலோங்கி நிற்கும் காப்புறுதிப்பத்திரத்தின் ஆங்கிலப் பதிப்பின் விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் விதிவிலக்குகளால் நிருவகிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**மேலதிக தகவல்களுக்காக:**

உங்களுக்கு மேலதிக தகவல்கள் அவசியமானால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைகளில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்:

- தொலைபேசி - 0112126126
- மின்னஞ்சல் - pilassist@peoplesinsurance.lk
- நாடு முழுவதும் அமைந்துள்ள எமது கிளை அலுவலகமொன்றுக்கு வருவதன் மூலம்